**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC.230/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | ராமலிங்கம் |
| Father's Name/Husband Name: | செல்லமுத்து |
| Village : | நூத்தப்பூர் |
| Taluk : | வேபந்தட்டை |
| Age : | 50 / 2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 09.03.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**(எதிரிகள் 1 மற்றும் 2 ஆகியோர் ஆஜர் இல்லை அவர்களுக்காக கு.வி.ச. பிரிவு 317ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )**

**கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டு சாட்சியானவர் மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கபடுகிறார்**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலிசார் விசாரித்த போது கூறிய சங்கதிகளைத் தான் நீதிமன்றத்தில் எனது முதல் நிலை சாட்சியத்தில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்று பிரச்சனை நடந்நதாக சொல்லப்படும் இடத்தில் நான் இருந்தேனா என்றால் இருந்தேன். பிரச்சனை நடக்கும் பொழுது எத்தனை நபர்கள் அங்கு இருந்தார்கள் என்றால் ஊரே கூடி பார்த்தார்கள் 20–25 நபர்கள் இருந்து இருப்பார்கள். போலிசார் பக்கத்து வீட்டில் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் வாக்குமூலம் பொற்றார்கள். எதிரிகள் தாக்கியதாகச் சொல்லப்படும் உருட்டுக் கட்டையை போலிசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. எத்தனை உருட்டுக் கட்டைகள் சம்பவத்தில் பயன்படுத்தப்பட்டது என்றால் 2. போலிசார விசாரிக்கும் பொழுது 2 உருட்டுக் கட்டைகள் பயன்படுத்தப்பட்டதை சொன்னேனா என்றால் சொன்னேன். 108 ஆம்புலன்ஸ்க்கு யார் போன் செய்து அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு

அழைத்துச் சென்றார்கள் எனது மகன் போன் செய்து அவனே அ.சா.1 ஐ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். ஆம்புலன்ஸில் நான் சென்றேனா என்றால் இல்லை. நான் இரவு தான் மருத்துவமனை சென்றேன். கருப்பையா, இராமலிங்கம், தங்கவேல், எதிரி சீனி இவர்கள் அனைவரும் எனது அண்ணன்கள் என்றால் சரிதான். எங்களுக்குள் நூத்தப்பூரில் உள்ள வயல்காடு ஆளுக்கு ஒன்றரை ஏக்கர் என பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான். மின் இணைப்பு கருப்பையா பெயரில் இருந்தது என்றால் சரியல்ல, எங்கள் அப்பா பெயரில் இருந்தது. இந்த மின் இணைப்பினால் எங்களுக்கும் எதிரிகளுக்கும் முன்விரோதம் இருக்கிறது என்றால் சரிதான். சம்பவம் நடக்கும் பொழுது எங்கள் வீட்டில் பூச்சு வேலை நடைப் பெற்றுக் கொண்டிருந்தது என்றாலும் அப்போது கொத்தனார் மற்றும் சித்தாள் வேலை செய்து கொண்டு இருந்தார்கள் என்றால் சரிதான். மேற்கண்ட கொத்தனார் மற்றும் சித்தாளிடம் போலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் இல்லை. சம்பவம் எப்போது நடந்தது என்றால் காலை 11.00 மணயளவில் நடந்தது. சாட்சி பிரசாந்த் எனது மகன் என்றாலும் சாட்சி ரம்யா எனது மகள் என்றாலும் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றால் சரியல்ல நான் இருந்தேன். எங்களுக்கும் எதிரிகளுக்கும் மின் இணைப்பு சம்பந்தமாக முன் விரோதம் இருந்து வருவதால் எனது மனைவி கொடுத்த பொய்யான புகார் வாக்குமூலத்திற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate
Additional Mahila Court,
Perambalur.